**பெல்மதுள்ள பிரதேச சபையின் 2025.09.11 ஆம் திகதி நடைபெற்ற பொது சபைக் கூட்டத்தின் அறிக்கை**

பெல்மதுள்ள பிரதேச சபையின் பொதுச் சபைக் கூட்டம் 2025 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் தலைமையில் பிரதேச சபையின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு கீழ் பெயர் குறிப்பிடப்பட்டு உள்ள கொரவ பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

| | | |
|---|---|---|
| 02. | கௌரவ பிரதேச சபை உப தலைவர் | - திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன |
| 03. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஏ.டி.டப்ளிவ். சோமரத்ன |
| 04. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. எச்.எம். சரத் உஷான் மஹனாம |
| 05. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன |
| 06. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. எஸ்.ஏ. சுகத் சாந்த அமரசேகர |
| 07. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஏ.டப்ளிவ். நிர்மிக தீபால் அபேவர்தன |
| 08. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. கே.ஜீ. சந்திரலால் |
| 09. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே |
| 10. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க |
| 11. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர |
| 12. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டப்ளிவ்.ஏ. கயான் புஸ்பகுமார |
| 13. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. டப்ளிவ்.எம். சிறியானி வீரசேகர |
| 14. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. கே. சுசன்த்த பிரேமகுமார |
| 15. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ரீ.கே. சம்பத் சிறிசான்த்த |
| 16. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார |
| 17. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. கே. சான்த புஸ்பகுமார குடாவத்த |
| 18. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. மயூரி சத்துரிக்கா பரணமான்ன |
| 19. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டப்ளிவ். வசன்த குமாரசிறி |
| 20. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. இராஜேந்திரன் திரிசோக் |
| 21. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஜீ. இந்திக்க குமார |
| 22. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன |
| 23. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. எச்.ஜீ. சச்சின் செவ்வந்தி |
| 24. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா |
| 25. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. எச். ஞானலதா ஹப்புதன்த்திரி |
| 26. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. எம். சுலாரி சந்தரேகா மாகாவிட்ட |
| 27. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஜீ.ஏ.கே. சுமேத லக்மால் |
| 28. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டப்ளிவ். இந்திக்க உதய குமார குணவர்தன |
| 29. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க |
| 30. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஏ.பீ. ஜகத் சேனாரத்தின |
| 31. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி |
| 32. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. ரீ. சிறியானி ஜானகி பீரிஸ் |
| 33. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. இராஜரத்தினம் புவனேஸ்வரி |
| 34. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. எம். பிரதீபா இந்துமிணி குலரத்ன |
| 35. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டப்ளிவ். ஜெஹன் மோஹன் |

வருகைதந்து இருந்த அனைவரும் தமது சமய அனுட்டானங்களை பின்பற்றி, கூட்டத்திற்கு வருகைதந்து இருக்கும் கௌரவ உப தலைவர், கௌரவ எதிர்கட்சித் தலைவர் உட்பட ஆளும் கட்சி எதிர் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரையும் கௌரவ தலைவர் அவர்கள் வரவேற்றதுடன் கூட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

01. கடந்த பொது சபைக் கூட்ட அறிக்கையை சபையில் நிறைவேற்றிக் கொள்ளல். (2025.08.20 / 2025.09.03)

2025.08.20 ஆம் திகதி நடைபெற்ற விசேட பொது சபைக் கூட்ட அறிக்கை மற்றும் 2025.09.03 ஆம் திகதி நடைபெற்ற விசேட பொதுக் கூட்ட அறிக்கைகள் வாசிக்கப்பட்டதாக கருதி திருத்தங்கள் இருப்பின் முன்வைப்பதற்கும், திருத்தங்கள் இல்லை என்றால் அவ் அறிக்கையை சபையில் நிறைவேற்றுவதற்கு கௌரவத் தலைவர் அவர்களினால் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் 2025.08.20 ஆம் திகதி நடைபெற்ற பொது சபைக் கூட்ட அறிக்கை சபையில் நிறைவேற்றுவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. டப்ளிவ். எம். சிறியானி வீரசேகர பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. வீ.ஏ. கயான் புஸ்பகுமார ஆமோதித்ததன் பின்னர் ஏகமனதாக சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் அடிப்படையில் 2025.09.03 ஆம் திகதி நடைபெற்ற விசேட பொது சபைக் கூட்ட அறிக்கை சபையில் நிறைவேற்றுவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு.மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க ஆமோதித்ததன் பின்னர் ஏகமனதாக சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

02. கௌரவ தலைவர் அவர்களினால் சபைக்கு முன்வைக்க வேண்டிய அறிவித்தல்கள்.

01. 2026 ஆம் ஆண்டிற்கான வரவ செலவுத் திட்டம் தயாரிக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு உள்ளதால் ஆலோசனைகள் மற்றும் பிரேரணைகள் இருப்பின் அவற்றை எழுத்து மூலமாக வழங்குமாறு பொது சபை கூட்டத்திற்கு முன்வைத்தார்.

02. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் இணைய தளத்திற்கு பிரவேசித்து நிகழ்நிலை முறையின் ஊடாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய கூற்றுக்களை பூரணப்படுத்தமாறும், அவற்றின் மென் நகல்களை assets@ciaboc.gov.li என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி அச்சுப் பிரதியை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய கூற்றுக்களை ஆணைக்குழுவிற்கு அனுப்புவதற்கு பிரதேச சபையில் சபைக் கூட்ட விடய உத்தியோகத்தருக்கு பெற்றுக்கொடுக்குமாறு பொது சபை கூட்டத்திற்கு முன்வைத்தார்.

03. பிரதேச சபையின் பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமூகம் அளிக்காமை தொடர்பாக அனுமதி பெறல் சம்பந்தமான பிரேரணை

நோய் நிலமைகள் காரணமாக பொது சபைக் கூட்டத்திற்கு சமூகம் அளிக்க முடியாது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. தனேஜ் குமரன் மற்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்ளிவ். மொஹான் மஞ்சுல அவர்களின் லீவு அனுமதித்தல் உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை எதிர்கட்சித் தலைவர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்ன அவர்கள் ஆமோதித்தார்.

04. கௌரவ சபைக்கு அனுப்பப்பட்டுள்ள நினைவுக்குறிப்புக்கள், பொதுமக்களின் புகார்கள், முறைப்பாடுகள் பொது சபைக்கு முன்வைத்தல் :- இல்லை

05. உரிய முறையில் காலம் வழங்கப்பட்டு உள்ள பிணக்குகள் :- இல்லை

06. உரிய முறையில் காலம் வழங்கப்பட்டு உள்ள பிரேரணைகள்

1. **கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்களின் பிரேரணைகள்**

1. தம்மரக்பித்த வீதியில் வயல்வெளியில் மழைநீர் வடிந்து செல்லாமல் இருப்பதன் காரணத்தினால் 15 ஏக்கர் அளவிலான வயல்கள் நெல் பயிரிடுவதற்கு முடியாமல் காணப்படுகிறது. அங்கே கழிவு நீர் தம்மரக்பித்த வீதியில் கொஸ்வத்த ஊடாக வடிந்து செல்லாத விதத்தில் வடிகால் மூடிக் காணப்படுகிறது. அவ் வடிகாலை மழைநீர் வடிந்து செல்லும் விதத்தில் திருத்தித் தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை எதிர்கட்சித் தலைவர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்ன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 01**

உள்ளூராட்சி மன்ற வாரத்தினை ஒட்டி இவ் வேலையை செய்து முடிப்பது உகந்தத என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

2. 10 ஏக்கர் பிரதான வீதி மற்றும் 10 ஏக்கர் பொது மயானபூமி வீதி என்பவற்றின் மேல் பகுதிகள் அபிவிருத்தி செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

கருத்து தெரிவிக்கையில், பொருள் உதவிகள் பெற்றுத் தர முடியுமானால் பொதுமக்களின் பங்களிப்புடன் இவ் வீதியை அபிவிருத்தி செய்ய முடியும் என்று கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை எதிர்கட்சித் தலைவர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்ன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 02**

தொழிநுட்ப உத்தியோகத்தர் உரிய இடத்தை பரிசோதித்து வழங்கும் பரிந்துரைகளுள்கு ஏற்ப பிரதேச சபையினால் வழங்கு முடியுமான பொருள் உதவிகளை வழங்குவது என்றும், அதுபோன்று முடியாத அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உரிய நிறுவனங்களுக்கு ஒப்படைப்பது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

03. கொடகம பொது மயானபூமியானது தற்போது கடாக காணப்படுகின்றது. பொது மயானபூமியை துப்புறவு செய்து தருமாறு ஊர் மக்கள் கோரிக்கை முன்வைத்து உள்ளதால் இதற்காக ஊர் மக்களின் ஒத்துளைப்பு கிடைக்கப்பெறும் என்பதால் பிரதேச சபையின் ஒத்துளைப்பை வழங்கி அப் பொது மயானபூமியை துப்புறவு செய்து தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை எதிர்கட்சித் தலைவர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்ன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இக் காணியில் பொரிய காடு வளர்ந்து காணப்படுவதால் மரண உதவிகள் சங்கத்தின் உறுப்பினர்களின் உதவியுடன் இவ் வேலையை செய்து தருமாறு கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், புல் வெட்டும் இயந்திரம் மூலம் புற்களை வெட்டி பின்னர் களைநாசினி தெளிக்க முடியுமானால் அது முன்று மாதங்கள் வரை தாக்குப் பிடிக்கம் என்றும், பொது மயானபூமிகள் அனைத்தும் பிரதேச சபைக்க கையகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுப்பது உகந்தது என்றும் அப்போது பொது மயானபூமிகளை பராமரிப்பதற்கு முடியும் என்று கௌரவ எதிர்கட்சித் தலைவர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், மாடுகள் இப் புற்களை உணவாக உட்கொல்வதால் களைநாசினிகள் பயன்படுத்துவது மிருகங்களுக்கு தீங்கு விளைவிக்கும் நிலை ஏற்படும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.வீ. கயான் புஸ்பகுமார அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், பொது மயானபூமிகள் அனைத்தும் பிரதேச சபைக்கு சொந்தமானவை என்றாலும் தோட்டப் புறங்களில் இறந்த உடல்கள் புதைக்கப்படும் இடங்கள் மயானபூமிகளாக பிரகடணப்படுத்தப்பட்டு இல்லை என்றும் அவ் மயானபூமிகள் வர்த்தமாணியில் பிரசுரிக்கப்பட்டு சட்ட ரீதியான மயானபூமிகள் என்று தோட்ட மக்களுக்கு மயானபூமிகளாக பயன்படுத்துவதற்கு பெற்றுக்கொடுப்பதற்கு எங்களுடைய ஈடுபாடு மற்றும் பங்களிப்பு வழங்குவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், தோட்டப்புறங்களில் வாழும் மக்களுக்கு சரியான இறந்த உடல்களை புதைப்பதற்கான இடங்கள் இல்லாததன் காரணத்தினால் தோட்ட முகாமையுடன் கலந்து ஆலோசித்து கௌரவமான முறையில் இறந்த உடல்களை அடக்கம் செய்வதற்கு உகந்த இடம் ஒன்றை ஒதுக்கி மயானபூமியாக பயன்படுத்துவதற்கு பெற்றுக் கொடுப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்ளிவ். ஜேகன் மோஹன் அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 03**

உள்ளூராட்சி மன்ற வாரத்தினை ஒட்டி இவ் விடயத்தை செய்வதற்கு பிரதேச சபை தொழிலாளர்களைக் கொண்டு மயானபூமியை துப்புறவு செய்வதற்கும், சூழல் மற்றும் பொது வசதிகள் குழு ஊடாக கட்டுப்பாட்டு பிரதேசத்தனுள் காணப்படும் பொது மயானபூமிகளை பட்டயல் படுத்தி அனைத்து பொது மயானபூமிகளையும் துப்புறவு செய்து பராமரிப்பது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

**ii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர அவர்களின் பிரேரணைகள்**

1. பெரண்டுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் 93 ஆம் பிரிவின் பிரவேச வீதியில் வாகனங்கள் செல்வதற்கு முடியாத விதத்தில் பழுதடைந்து காணப்படும் வடிகால் தொகுதியை புணரமைத்து தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. திரு. ஜீ. இந்திக்க குமார் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இந்த வடிகால் தொகுதியானது கடந்த ஒரு வருட காலமாக பழுதடைந்து காணப்படுவதாகவும், பார வாகனங்கள் செல்ல முடியாமல் கானப்படுவதாகவும், ஆபத்துக்களை அறியாத நபர்கள் இந்த வடிகால் தொகுதியின் ஊடாக பார வாகனங்கள் செலுத்தினால் விபத்தக்கள் இடம்பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக காணப்படுவதால் திடீர் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ள இடம் ஒன்றாக கருதி விரைவாக இவ் வடிகால் தொகுதியை புணரமைப்பு செய்வது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 04**

மேற்கூறிய பிரேரணைகள் தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. பெரண்டுவ ஆரம்ப வைத்திய நிலையம் தற்காலிகமாக செயல்படும் இடம் இரவு நேரங்களில் எவ்வித பாதுகாப்பு வசதிகளும் இன்றி காணப்படுவதால் அவ் இடத்திற்கு வீதி விளக்க ஒன்று பொருத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக குமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 05**

பழுதுபார்த்து திருத்துவதற்கு முடியுமான வீதி விளக்குகளை பழுதுபார்ப்பதற்கும், புதிய வீதி விளக்குகள் பொருத்துவது தொடர்பாக இலங்கை மின்சார சபையின் சபர/இர/லி5/வீ.வி./2023 மற்றும் 2023.04.17 ஆம் திகதியுமுடைய கடிதத்திற்கு அமைய புதிதாக வீதி விளக்குகள் பொருத்த வேண்டாம் என்று குறிப்பிட்டு அனுப்பப்பட்டு உள்ள கடிதத்திற்கு அமைய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. நாள் ஒன்றுக்கு 2000 k.g. அளவிலான தேயிலை கொழுந்து கொண்டு செல்லும் பந்துலமய கமநல வீதியில் உள்ள பாலத்தை புனரமைப்பு செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக குமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 06**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**iii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன அவர்களின் பிரேரணைகள்**

01. ஹப்புருகல மெதவத்தவில் இருந்து கலுகலதென்ன வரையிலான வீதியை புனரமைப்பு செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக குமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 07**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. ஹப்புருகல தோட்ட பிரிவு கோயில் வரையிலான வீதியை புனரமைப்பு செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 08**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. இசுருகம பொது மயானபூமி வரையிலான வீதியை அபிவிருத்தி செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இசுருகம கிராமமானது 2001 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மண்சரிவு அபாயம் காரணமாக இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்பட்ட கிராமம் என்பதால், கடந்த 20 வருட காலத்தில் எவ்விதமான அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத கிராமம் என்பதால் இவ் வீதியானது அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 09**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

04. நிரல்கம குடியேற்றம் வன்னிஆரச்சி கிராம வீதியை அபிவிருத்தி செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 10**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

05. உடங்கொடை பிரதான வீதியை தார் இட்டு அபிவிருத்தி செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், தார் இடப்பட்டு உள்ள இவ் வீதியானது சில இடங்களில் உடைந்து காணப்படுவதால், தற்போது எவ்விதமான தீர்வொன்று பெற்றுக்கொடுத்தால் குறைந்த செலவில் இவ் வீதியை அபிவிருத்தி செய்ய முடியும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இதுபோன்ற திட்டங்களுக்கு முன் கலக்கப்பட்ட தார் இடம் (பிரிமிக்ஸ்) ஒன்று உருவாக்கிக்கொள்ள முடியுமானால் அது மிகவும் உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 11**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**iv. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களின் பிரேரணைகள்**

01. 172/பி பெரண்டுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் கல்அச்சாபொல கல்பீல்ல வீதியின் இடையில் உள்ள ''மஹதொல'' குளிக்கும் இடம் ஒன்றாக அபிவிருத்தி செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 12**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய JCB இயந்திரத்தை பயன்படுத்தி அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள முடியுமாயின், JCB இயந்திரம் பழுதுபார்த்ததன் பின்னர் இவ் அபிவிருத்திப் பணியை மேற்கொள்வது உகந்தத என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. புலத்வத்த பொது மயானபூமிக்கு செல்லும் வீதியை JCB இயந்திரத்தை பயன்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 13**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய JCB இயந்திரத்தை பயன்படுத்தி அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள முடியுமாயின், JCB இயந்திரம் பழுதுபார்த்ததன் பின்னர் இவ் அபிவிருத்திப் பணியை மேற்கொள்வது உகந்தத என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. துரயின்னவத்த வீதியை JCB இயந்திரத்தை பயன்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 14**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய JCB இயந்திரத்தை பயன்படுத்தி அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள முடியுமாயின், JCB இயந்திரம் பழுதுபார்த்ததன் பின்னர் இவ் அபிவிருத்திப் பணியை மேற்கொள்வது உகந்தத என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

04. புலத்வத்த திருமதி. சிறியாவதி அவர்களின் வீட்டின் அருகில் இருந்த இடது புறமாக உள்ள வீதியில் வடிகால் தொருதிக்காக போதிய அளவிலான சிலின்டர் ஒன்று இட்டு அபிவிருத்தி செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 15**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

05. 30 ஏக்கர் இதிகஹஹேன வீதியில் தேவையான இடங்களுக்கு சிலின்டர்கள் பெற்றுக்கொடுத்தல் உகந்தது என்று பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 16**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய சிலின்டர்கள் பெற்றுக்கொடுக்க முடியும் என்றால் அவற்றை பெற்றுக்கொடுப்பதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**v. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. எம். பிரதீபா இந்துமிணி குலரத்ன அவர்களின் பிரேரணைகள்**

01. மாரபன, பஹலவெல கம்பி பாலத்தின் தகடுகள் (பஸ் வண்டிகளின் கீழ் பயன்படுத்தப்படும் செசீ) உடைந்து போய் உள்ளதால் போக்குவரத்து மிகவும் கடினமான நிலையில் காணப்படுகின்றது. இதை பழுதுபார்த்து தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசான்த குமார புத்தஆரச்சி அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இந்த கம்பி பாலத்தின் தகடுகள் துருப்பிடித்து காணப்படுவதன் காரணமாக போக்குவரத்து செய்யும் பொது மக்கள் மற்றும் விசேடமாக பாடசாலை மாணவர்களுக்கு ஆபத்துக்கள் ஏற்படுவதால் விரைவாக இக் கம்பி பாலத்தின் தகடுகளை பழுதுபார்த்து தருமாறு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. எம். பிரதீபா இந்துமிணி குலரத்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், 08 கிராம மக்கள் இந்த கம்பி பாலத்தை பயன்படுத்துகின்றனர். இவர்களுள் பாரிய அவதானங்களுக்கு முகம்கொடுப்பது பாடசாலை மாணவர்கள் ஆகும். இந்த விடயத்திற்கு பெரிய அளவுகளில் பணம் செலவு ஆகாது என்றும் இதை பழுதுபார்ப்பதற்கு தேவையான தொழிநுட்ப அறிவை பயன்படுத்திக்கொள்ள முடியும் என்றும், பஸ் வண்டிகளின் தகடுகள் துருப்பிடித்து காணப்படாத போதிலும் அவை இணைக்கப்பட்டு உள்ள பட்டங்கள் கழன்று உள்ளதால் தகடுகள் பட்டங்களுடன் இணைத்து ரிவட் இட முடியுமானால் குறைந்த செலவில் இக் கம்பி பாலத்தை பழுதுபார்க்க முடியும்

என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சாந்த அமரசேகர அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 17**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை தொழிலாளர்களை பயன்படுத்தி மேற்கொள்ள முடியுமான அபிவிருத்தி பணி என்றால் அதை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை ஒப்பந்த அடிப்படையில் செய்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. மட சந்தியில் இருந்து பஹலவெல கம்பி பாலம் வரையிலான வீதியின் இருபுறமும் தொழிலாளர்களை பயன்படுத்தி அல்லது பெகோ இயந்திரத்தை பயன்படுத்தி வடிகால் தொகுதியை அமைத்து தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசான்த குமார புத்தஆரச்சி அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 18**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை தொழிலாளர்களை பயன்படுத்தி வடிகால் தொகுதியை அமைப்பதற்கும், அதுபொல் செய்ய முடியாத விடத்து பெகோ இயந்திரம் பழுதுபார்த்த பின்னர் இவ் அபிவிருத்தி பணிகளை செய்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**vi. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. வீ.ஏ. கயான் புஸ்பகுமார அவர்களின் பிரேரணைகள்**

01. தெஹிகஹதெனிய வீதியின் பிரவேச வாயிலை அபிவிருத்தி செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.ஏ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இவ் வீதியின் ஒரு புறத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கல் தடுப்பின் காரணமாக வடிகால் தொகுதிக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது என்றும், அதிக மழை காலங்களில் இந்த வடிகால் தொகுதியானது மூடப்பட்டு தண்ணீர் வீதியின் ஊடாக வடிந்து செல்வதால் இவ்வீதியானது அடிக்கடி பழுதாகின்றது என்றும், இவ் வீதியின் ஒரு பகுதி புதையுண்டு காணப்படுவதால் இதற்கு தலையிட்டு வீதியை செப்பனிட்டு தருமாறும், இவ் வீதியில் தண்ணீர் வடிந்தோடும் வடிகால் தொகுதியை மரித்து நிர்மாணிக்கப்பட்டுள்ள அத்துமீறப்பட்டு ஏதெனும் கட்டுமானங்களை கட்டப்பட்டு இருப்பின் உரிய களஆய்வுகள் செய்து உரிய நடவடிக்கைகள் எடுக்கும் படி கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. வீ.ஏ. கயான் புஸ்பகுமார அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 19**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கும், இங்கே அத்துமீறப்பட்டுள்ள கட்டுமாணங்கள் இருப்பின் அந் நபர்களை பிரதேச சபைக்கு வரவழைத்து கலந்து ஆலோசித்து உரிய நடவடிக்கைகள் எடுப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**vii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. எம். சுலாரி சந்தரேகா மாகாவிட்ட அவர்களின் பிரேரணைகள்**

01. புதிய பிரதேச சபை உறுப்பினர்கள் இருப்பதன் காரணமாக சமாதான நீதவான் பதவிகள் மற்றும் அப் பதவிகளுக்கான பொறுப்புக்கள் பற்றிய பயிற்சி திட்டம் ஒன்று பெற்றுத் தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை எதிர்கட்சித் தலைவர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்தின அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 20**

புதிய பிரதேச சபை உறுப்பினர்களுக்காக சமாதான நீதவான் பதவிகள் வழங்கப்பட்ட பின்னர் அப் பதவிக்கான பொறுப்புக்கள் பற்றிய பயிற்சி திட்டம் ஒன்று வழங்குவது உகந்தது என்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. பிரதேச சபை உறுப்பினர்களுக்கு தன்முகவரியுள்ள கடிதத்தால்கள் மற்றும் அடையாள அட்டைகள் வழங்குவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை எதிர்கட்சித் தலைவர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்தின அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 21**

பிரதேச சபை உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குவதற்கும் உறுப்பினர் ஒருவருக்கு 50 தன்முகவரியுள்ள கடிதத்தால்கள் பிரதேச சபை நிதியில் இருந்து அச்சிட்டு வழங்குவது உகந்தது என்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. பிரதேச சபை உறுப்பினர்களுக்கு பிரத்தியோகமான உறுப்பினர் அறை ஒன்றை பெற்றுத் தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை எதிர்கட்சித் தலைவர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்தின அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், பிரதேச சபை உறுப்பினர்களுக்கு பிரத்தியோகமான உறுப்பினர் அறை ஒன்றின் தேவை காணப்படுக்றது என்றும், அதிக அளவிலான பிரதேச சபை உறுப்பினர்கள் தூர இடங்களில் இருந்து வருகை தருவதால் அவர்களுக்கு இருப்பதற்கு ஒரு இடம் தேவை என்பதாலும் உறுப்பினர்களை சந்திப்பதற்கு வரும் பொது மக்களின் குறைகளை கேட்டறிந்து தீர்ப்பதற்கு இடம் ஒன்று இருப்பது உகந்தது என்றும், இதனால் விரைவாக பிரத்தியோகமான உறுப்பினர் அறை ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. ஏம். சுலாரி சந்தரேகா மாகாவிட்ட அவர்கள் மற்றும் கௌரவ பிரதேச சபை எதிர்கட்சித் தலைவர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்தின அவர்களும் கூறினார்கள்.

**முடிவுகள் இலக்கம் 22**

நிர்வாகத்துடன் ஆலோசித்து உகந்த இடம் ஒன்றை கண்டறிந்து எதிர்வரும் சபைக் கூட்டத்தின் போது விபரங்களை முன்வைப்பது உகந்தது என்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**அவசர பிரேரணைகள்**

**கௌரவ பிரதேச சபை தவைலர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் பிரேரணைகள்**

01. பெல்மதுள்ள நகரத்தில் முறையற்ற விதத்தில் வீதி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வியாபாரிகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் அவ் வியாபாரிகளின் குடும்பங்களை நடாத்திச் செல்வதில் பெரும் இடர்களுக்கு ஆளாகி உள்ளனர். இதற்கு பிரதேச சபை தலையிட்டு உகந்த பெறிமுறை ஒன்றை தயாரிப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் கலந்தாலோசித்து கொழும்பு வீதியை அகலப்படுத்தும் போது வியாபார நடவடிக்கைகளை அப்புறப்படுத்திக் கொள்வதாக ஒரு ஒப்பந்தம் பெறப்பட்டு அவர்களுக்கு தற்காலிக அடிப்படையில் வியாபார நடவடிக்கைகளை தொடர்வதற்கு ஒரு பெறிமுறையை தயாரிப்பதற்கு முடியுமான உதவிகளை வழங்கு முடியுமானால் அது மிகவும் முக்கியமான ஒன்றாகும் என்று கௌரவ பிரதேச சபை எதிர்கட்சித் தலைவர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்ன அவர்கள் கூறினார்.

கருத்து தெரிவிக்கையில், இந்தி வியாபாரங்களை நடாத்திச் செல்பவர்கள் குறைந்த வருமானம் பெறும் நபர்கள் என்பதால் அவர்களுக்கு அவ் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்றும், விசேடமாக பொது மக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு உகந்த பொறிமுறை ஒன்றின் கீழ் உத்தரவாதத்துடன் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உப தலைவர் திரு. ஏச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் கூறினார்.

**முடிவுகள் இலக்கம் 23**

வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் இது பற்றி ஆலோசிப்பதற்கும், இந்த காணி தொடர்பாக எவ்வித உரிமையும் இல்லாததன் காரணத்தனால் சட்டங்கள் உருவாக்குவதற்கு அதிகாரங்கள் இல்லை என்பதனால் ஒரு மத்தியஸ்தராக ஈடுபட்டு உதவிகள் செய்வது உகந்தது என்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. உள்ளூராட்சி மன்ற வாரத்தை ஒட்டி 2025.09015 ஆம் திகதியில் இருந்து 2025.09.21 ஆம் திகதி வரை நடாத்துவதற்கு உள்ள நிகழ்ச்சி திட்டங்களுக்காக செலவுகள் மேற்கொள்வதற்கான மதிப்பீடுகள் அனுமதி பெற்றுக்கொள்வதற்கு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை எதிர்கட்சித் தலைவர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்ன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், மரங்கள் நடும் நிகழ்ச்சியில் பாடசாலைகளுக்கு பழமரக் கன்றுகள் வழங்குவது உதந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்கள் கூறினார்.

கருத்து தெரிவிக்கையில், நிகழ்ச்சிகள் முடிவடையும் திகதி அதாவது 2025.09.21 ஆம் திகதி நடாத்த இருக்கும் விளையாட்டுப் பொட்டி நிகழ்ச்சிகளில் பெண்கள் கிரிக்கட் போட்டிக்கு ரூபா. 20,000.00 பெற்றுக் கொடுக்கும் படி கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. டப்ளிவ்.எம். சிறியானி வீரசேகர அவர்கள் பிரேரித்தார். இப் பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், ஆண் மற்றும் பெண்கள் கிரிக்கட் போட்டியின் இரண்டாம் இடத்திற்கு ரூபா. 12,500.00 வீதம் வழங்குவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை தலைவர் கூறினார்.

அதன் அடிப்படையில் மேற்கூறிய திருத்தங்களுடன் கூடிய வரவு செலவுத் திட்டம் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 24**

உள்ளூராட்சி மன்ற வாரத்தை ஒட்டி 2025.09015 ஆம் திகதியில் இருந்து 2025.09.21 ஆம் திகதி வரை நடாத்துவதற்கு உள்ள நிகழ்ச்சி திட்டங்களுக்காக செலவுகள் ரூபா. 622,500.00 இற்கான மதிப்பிடப்பட்ட மதிப்பீடு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02 . புதிய வீதவரி திருத்தங்களுக்கான கட்டணங்களாக ரூபா. 1,501,385.00 தொகையை மதிப்பீட்டு தினைக்களத்திற்கு செலுத்துவதற்கான அனுமதியை பெறுவதற்கு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கேளரவ சபையை செயல்பாட்டு குழுவாக செயல்படுவதற்கு சந்தர்ப்பம் வழங்கி செயலாளர் அவர்களுக்கு கருத்துக்கள் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், வரிகள் அறவிடுவது போல வரி செலுத்துவோருக்கு வசதிகள் ஆற்றப்படல் வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை எதிர்கட்சித் தலைவர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 25**

புதிய வீதவரி திருத்தங்களுக்கான கட்டணங்களாக ரூபா. 1,501,385.00 தொகையை மதிப்பீட்டு தினைக்களத்திற்கு செலுத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் களியாட்ட வரிகள் அறவிடுதல்கள் தொடர்பாக செயல்படும் போது பிரதேச சபையினால் அறவிடப்படும் சதவீதம் தொடர்பாக பிரதேச சபை கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு வெளியில் இருந்து வரும் விண்ணப்பதாரர்களுக்கு களியாட்ட வரிகள் அறவிடுதல்கள் 15% ஆக இருத்தல் வேண்டும் என்றும், பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் வாழும் பொதுமக்களுக்கான களியாட்ட வரிகள் அறவிடுதல்கள் 12% ஆக இருத்தல் வேண்டும் என்பது உகந்தது என்று பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உப தலைவர் திரு. எச்.ஜீ. நலின் மாகம்மன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 26**

பிரதேச சபை கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு வெளியில் இருந்து வரும் விண்ணப்பதாரர்களுக்கு களியாட்ட வரிகள் அறவிடுதல்கள் 15% ஆக இருத்தல் வேண்டும் என்றும், பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் வாழும் பொதுமக்களுக்கான களியாட்ட வரிகள் அறவிடுதல்கள் 12% ஆக அறவிடுதல் வேண்டும் என்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**கௌரவ பிரதேச சபை உப தவைலர் திரு. ஏச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்களின் பிரேரணைகள்**

01. பெல்மதுள்ள கங்கந்த தேசிய பாடசாலையில் தரம் 06 இல் கல்வி கற்கும் எம்.ஏ. மதீச சங்கல்ப பராக்கிரம பெரேரா என்ற மாணவன் சர்வதேச கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிக்கு சப்ரகமுச மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி மலேசியா நாட்டிற்கு செல்ல இருப்பதன் காரணத்தினால் அவருக்கு 650 அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகிறது என்பதனால், மேலும் இவருடைய தந்தை நிரந்தர தொழில் ஒன்று இல்லாதவர் என்பதால் எங்கள் பிரதேச சபையினால் உதவியொன்று வழங்குவதற்கு உகந்த பணத்தொகை ஒன்றை வழங்க முடிவு எடுப்பதற்காக கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை எதிர்கட்சித் தலைவர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்தின அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 27**

கௌரவ ஆளுநர் அவர்களின் அனுமதியை பெற்றதன் பின்னர் எம்.ஏ. மதீச சங்கல்ப பராக்கிரம பெரேரா என்ற மாணவனுக்கு ரூபா. 20,000.00 வழங்குவது உகந்தது என்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**07. செயற்பாட்டுக் குழுக்களின் அறிக்கைகள் முன்வைத்தல்கள்**

2025.08.25 ஆம் திகதி நடைபெற்ற நிதி மற்றும் கொள்கை குழுவின் கூட்ட அறிக்கையை அனுமதிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.ஏ.கே. சுமேத இலக்மால் அவர்கள் பிரேரிக்க அது கௌரவ பிரதேச சபை எதிர்கட்சித் தலைவர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்தின அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

2025.08.25 ஆம் திகதி நடைபெற்ற சூழல் மற்றும் பொது வசதிகள் குழுவின் கூட்ட அறிக்கையை அனுமதிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. பி. துசாரி தமயந்தி சில்வா அவர்கள் பிரேரிக்க அது கௌரவ பிரதேச சபை எதிர்கட்சித் தலைவர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்தின அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், பரிந்துரைகள் இலக்கம் 19 இன் கீழ் பெல்மதுள்ள பிரதேச சபையின் பொது நூலகத்திற்கு பின்னால் உள்ள காணியில் பசுமைப் பூங்கா ஒன்று நிர்மாணிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை கருத்தில் கொண்டு இந்த காணியில் பழச்சாறு விற்பனை நிலையம் (ஜூஸ் பார்) ஒன்றை அமைப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க அவர்கள் தெரிவித்தார்.

2025.08.25 ஆம் திகதி நடைபெற்ற தொழிநுட்ப சேவைகள் குழுவின் கூட்ட அறிக்கையை அனுமதிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சாந்த அமரசேகர அவர்கள் பிரேரிக்க அது கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

2025.09.01 ஆம் திகதி நடைபெற்ற தொழிநுட்ப சேவைகள் குழுவின் கூட்ட அறிக்கையை பரிசீலனை செய்யும்போது முடிவுகள் இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்டு உள்ள முடிவை எடுப்பதற்கு காரணங்களை பரிசீலனை செய்வதற்கு பொதுச் சபை கூட்டத்தை செயற்பாட்டு குழுவாக செயல்படுவதற்கு சநிதர்ப்பம் வழங்கி வாகனங்கள் விடய உத்தியோகத்தர் திருமதி. எச்.எச.ஜீ.எம். குணசேகர அவர்களிம் இருந்து கருத்துக்கள் விசாரணை செய்யப்பட்டன. அதன் அடிப்படையில் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்களினால் அப் பிரேரணை கீழ் உள்ளவாறு திருத்தம் செய்யப்பட்டது.

> ZA 5173 FATON ரக பெகோ லோடர் இயந்திரத்தின் திரேங்க் இல் ஒயில் சீல் பொருத்துவது மற்றும் டெம்பர் புலியை பாழுதுபார்ப்பதற்கு பிரதேந சபையில் பதிவு செய்யப்பட்டு உள்ள இரண்டு நிறுவனங்களுக்கு மேலதிகமாக மாகாண சபையினால் அனுமதி வழங்கப்பட்டு உள்ள 02 நிறுவனங்களான பிரதீப் மோடர்ஸ், மாதம்பே, அட்டகலம்பன்ன (ப.இல. 4160) மற்றும் லியனகே மோடர்ஸ் இல. 164/f பிரதான வீதி, பத்தரமுல்ல (ப.இல. 39) மற்றும் வெளி நிறுவனங்களாக மாரபன, மாவுதெல்ல, இரத்தினபுரியில் அமைந்துள்ள ஜயந்த இஞ்ஞினியரிங் நிறுவனத்தில் இருந்தும் விலைமனுக்கள் கோரப்பட்டு பழுதுபதர்த்தல்களை மேற்கொள்ளுமாறும், பெகோ லோடரின் சயிலென்சரை பழுதுபார்ப்பதற்கு மேலே குறிப்பிடப்பட்டு உள்ள விலைமனுக்கள் கோரப்பட்ட நிறுவனங்களில் இருந்து விலைமனுக்கள் கோரப்பட்டு பழுதுபார்த்தல்கள் மேற்கொள்வது உகந்தது என்ற திருத்தி அறிக்கை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏஸ்.ஏ. சுகத் சாந்த அமரசேகர அவர்களால் ஆமோதிக்கப்பட்டது.

2025.08.25 மற்றும் 2025.09.03 ஆம் திகதிகளில் நடைபெற்ற வீடமைப்பு மற்றும் கமூக அபிவிருத்தி குழுவின் கூட்ட அறிக்கைகளை அனுமதிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உப தலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் பிரேரிக்க அது கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், முடிவுகள் இலக்கம் 06 இன் குறிப்பிடப்பட்டு உள்ள 2026 ஆம் ஆண்டில் மாரபன உப அலுவலகத்தின் கிழ் மாடியில் ஆரம்ப படசாலை ஒன்று ஆரம்பிப்பதன் மூலம் அப் பிரதேசத்தில் 05 ஆரம்ப படசாலை இருப்பதன் காரணத்தினால், அவ் ஆரம்ப பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களுக்கு அசாதாரணங்கள் ஏற்படும் என்பதாலும், இதனால் அவர்களின் வாழ்வாதாரத்திற்கு பெரும் தாக்கம் ஏற்படும் என்பதனால், மாரபன உப அலுவலகத்தின் கிழ் மாடியில் ஆரம்ப படசாலை ஒன்று தொடங்குவது தொடர்பாக எதிரான கருத்தை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சாந்த அமரசேகர அவர்கள் கூறினார்.

கருத்து தெரிவிக்கையில், ஆரம்ப படசாலை ஒன்று ஆரம்பிக்கும் பிரேரணைக்கு ஏற்ப ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கு எவ்வித தீங்கும் ஏற்படாத விதத்தில் முடிவு எடுப்பது உதந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் கூறினார்.

**08. பெறுவனவுகள் மற்றும் செலவுகள் பற்றிய மாதாந்த அறிக்கை, திரட்டப்பட்ட மாதாந்த வருமானம் பற்றிய மேம்பாட்டு அறிக்கை கௌரவ சபைக்கு முன்வைத்தல்**

2025.08.01 ஆம் திகதியில் இருந்து 2025.08.31 ஆம் தகதி வரையிலான மாதத்திற்கு உரிய பிரதேச சபையின் கொடுப்பனவு அறிக்கை அனுமதி வழங்கல் மற்றும் பெறுவனவுகள் மற்றும் செலவுகள் பற்றிய மாதாந்த அறிக்கை, திரட்டப்பட்ட மாதாந்த வருமானம் பற்றிய மேம்பாட்டு அறிக்கை போன்றவற்றிற்கு அனுமதி வழங்குவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அது கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.ஏ. சுமேத லக்மால் அவர்களால் ஆமோதிக்கப்பட்டது.

வேறு விடங்கள்

- பிரதேச சபை உறுப்பினர்களின் பிரத்தியோக தெளிவுபடுத்தல்கள் - இல்லை
- பிரதேச சபைத் தலைவரின் நன்றியுரை

இன்று பிரதேச சபைக் கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் கௌரவ எதிர்கட்சித் தலைவர் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கௌரவ தலைவர் தனது நன்றி உரையை முடித்துக் கொண்டார்.

பி.ப. 02.30 மணி அளவில் சபைக் கூட்டம் முடிவடைந்தது.

தலைவர்
பிரதேச சபை
பெல்மதுள்ள